விலையில் மண்ணெண்ணெய் வேண்டுமென்பது மீனவர்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. எனவே, அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, தமிழகத்தினுடைய வீர விளையாட்டாக இருக்கின்ற கபடிப் போட்டியில் கலந்துகொள்கின்ற இளைஞர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையிலே நம்முடைய அரசு நிறுவனங்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற ஏற்பாட்டினை கபடி வீரர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மத்திய தொகுதியிலிருந்து பெண்ணாகரம் தொகுதி வரை இதுவரை 11 தொகுதிகளின் இடைத்தேர்தல்களில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த 11 தொகுதிகளில் பெற்ற வெற்றியானது 2011 ஆம் ஆண்டு வரப்போகிற பொதுத் தேர்தலிலே அடையப் போகின்ற வெற்றிக்கு முன்னோட்டமாக அமைந்திருக்கின்றன என்ற வகையிலே, 2011 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே நாம் வெற்றிகளைக் குவிப்போம் என்று தெரிவித்து, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அணிவகுப்போம் என்று சொல்லி, நன்றி கூறி விடைபெறுகின்றேன், வணக்கம்.

8. மேலவையை மீண்டும் தமிழ்நாட்டில் தோற்றுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்பகல் 12—25

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபொழுது, மீண்டும் மேலவை அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்தி உரையாற்றினார். இங்கே ஏற்பட்ட கூச்சல் குழப்பத்தில் அவர் என்ன கருத்தை வெளியிட்டார், எந்தக்

TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கையை வலியுறுத்தினார் என்பது பத்திரிகையாளர்கள் உட்பட யாருக்கும் அவ்வளவாகத் தெளிவாகத் தெரியாது. எனவேதான் நான் அவர் வெளியிட்ட அந்தக் கோரிக்கையை, அதாவது மேலவை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலவை எப்பொழுது கலைக்கப்பட்டது, மேலவை எதற்கு தேவைப்பட்டது என்பதையெல்லாம் இந்த அவையிலே உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள். மேலவையில் மூளைகள் இருந்தன. கீழவையில், சட்டசபையில் இருதயங்கள் இருந்தன, அவயங்கள் இருந்தன. மூளைகள் இருந்த இடமாக மேலவை இருந்தபோது அந்த மேலவையைக் கலைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டு, அது கலைக்கப்பட்டது. மேலவையில் நம்முடைய பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் தொடக்கத்திலே வீற்றிருந்தார். இறுதிக் கட்டத்திலே மேலவையில் நானும் இடம் பெற்றிருந்தேன். அந்த மேலவை 1986 ஆம் ஆண்டு, 1–11–1986 அன்று ஓர் அறிவிப்பின்மூலம் கலைக்கப்பட்டது. அப்பொழுது மேலவையினுடைய தலைவராக தமிழறிந்த தமிழறிஞர், சிலம்புச் செல்வர், ம.பொ.சி. அவர்கள் வீற்றிருந்தார்கள். அவர்கள் மிகுந்த துயரத்தோடு மேலவை கலைக்கப்படுவதை, மேலவை இனி இருக்காது என்ற நிலையை ஆழ்ந்த வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, 1989—ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில் மீண்டும் மேலவை வேண்டுமென்ற தீர்மானத்தை சட்டப் பேரவையிலே நிறைவேற்றி, அனுப்ப வேண்டிய முறைப்படி, டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். அங்கிருந்து நமக்கு பதில் கிடைப்பதற்குள்ளாக, ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க., 4—10—1991—ல் அந்தத் தீர்மானத்தை நீக்கக் கோரி, அவர்கள் அதை நீக்கினார்கள். பின்னர் மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்தபோது 1996 ஆம் ஆண்டு, 26—7—1996 அன்று சட்டமன்ற மேலவை வேண்டுமென்ற தீர்மானத்தை அவையிலே நிறைவேற்றினோம். காலச் சக்கரம், தேர்தல் சக்கரம் சுழன்று, சுழன்று 2001—ல் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள், நாம் கொண்டு வந்த தீர்மானத்தை நீக்கக் கோரி, 12—9—2001—ல் சட்டமன்ற மேலவை தேவையில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

இப்படி அற்பாயுசு மேலவைகள் வந்து, வந்து போகிற சூழ்நிலை இருந்த அந்தக் காலகட்டத்திற்குப் பிறகு—இப்பொழுது தேர்தல்

முடிந்து, தொடர்ச்சியாக இரண்டு, மூன்று தேர்தல்களிலே திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்றிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நம்முடைய நண்பர், திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் இங்கே பேசும்பொழுது, மீண்டும் மேலவை வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். அந்தக் கருத்து எனக்கும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அவை முன்னவருக்கும் உண்டு. அமைச்சர் பெருமக்களுக்கும் உண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள முன்னணியினருக்கும் உண்டு. ஏனென்றால் மேலவை இருந்தால், இத்தகைய கூச்சல்–குழப்பம் இல்லாத ஒரு அவையை நாம் காண முடியும். இங்கே ஏற்படுகின்ற அமளிகளுக்கு ஆறுதல் அளிக்கின்ற இடமாக அது இருக்கும்.

பிற்பகல் 12–30

மேலவையிலே இலட்சுமணசாமி முதலியாரைப் போன்றவர்களையெல்லாம் நாங்கள் சந்தித்திருக்கிறோம். மேலவையில் சிலம்புச் செல்வரைச் சந்தித்திருக்கிறோம். மேலவையில் மாணிக்கவேலரைச் சந்தித்திருக்கின்றோம். மேலவையில் பெரும் அறிஞர் பெருமக்களை, இராஜாராம் நாயுடு போன்றவர்களை நாங்கள் சந்தித்திருக்கிறோம். பேரவையிலே ஏற்படுகின்ற குழப்பங்களுக்கு, ஏற்படுகின்ற சூட்டைத் தணிக்கின்றவகையில் மேலவை பயன்பட்டது; நிம்மதியும் ஏற்பட்டது. ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள், மேலவையைப் பற்றி விவாதம் வந்தபோது, "மேலவையும் பேரவையும் cup and saucer–ஐப்போன்றவை. Cup இல் காபி சூடாக இருந்தால் அதை saucer இல் ஆற்றி சூட்டைக் குறைத்துக்கொள்வதைப் போல மேலவை பயன்படுகிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே cup and saucer இனிமேல் வேண்டும் என்பதை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நானே அறிவித்துவிடவில்லை; அதற்கான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பி, பெற வேண்டிய அந்த அனுமதியைப் பெறுவோம், பெறக்கூடிய சூழ்நிலை வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தை வழங்கியிருக்கிறார்கள். சுருக்கமாகச் சில செய்திகளைச் சொல்லி விடைபெறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலவை தேவை என்கிற விவாதம் வரும்போதெல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. தற்போதும் அதே எதிர்ப்பினை எங்களுடைய கருத்தாகப் பதிவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள், திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலவை வேண்டுமென்ற கோரிக்கையைப்பற்றி விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், பொதுவாக இந்திய அளவில் பல மாநிலங்களில் இந்த மேலவைகள் இல்லை. நமது மாநிலத்திலும் இடைப்பட்ட காலத்தில் அது இல்லாமல் போயிருக்கிறது. குறிப்பாக, இதை யார் ஆட்சிக் காலத்தில் எடுத்தார்கள், யார் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார்கள் என்று விவாதிப்பதைவிட, மேலவை அன்றைய காலகட்டத்தில் தேவையாக இருந்தது; அறிஞர் பெருமக்கள் எல்லாம் அதிலே பல்வேறு அரிய கருத்துகளைச் சொன்னார்கள் என்பதெல்லாம் மிகவும் பொருத்தமானது, உண்மையானதுதான் என்றாலும், தகவல், அறிவியல், தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிற இந்தக் காலச்சூழ்நிலையில், மேலவையின் மூலமாகத்தான் கருத்துகளைப் பெற்று கீழவையாக இருக்கின்ற நமது சட்டப் பேரவை செயல்பட வேண்டிய நிலைமை இல்லை என்றுதான் கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. ஆகவே, அது ஒரு தேவையற்ற, அதிகச் செலவையும் ஏற்படுத்தும் என்கின்ற காரணத்தினாலே, இப்போது இருக்கிற இந்த நடைமுறையே தொடர்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தை நாங்கள் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இந்தக் கருத்தை எடுத்துரைத்திருப்பவர்கள் மேலவை அமைந்த பிறகு மேலவைக்கு உறுப்பினர்களை அனுப்புகிற நேரத்தில் "அதிலே நாங்கள் இடம்பெற மாட்டோம்" என்ற உறுதியை இப்போது இங்கே அளிக்கத் தயாராக இருக்கிறார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன். திரு. வை. சிவபுண்ணியம் உட்காருங்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக முதலில் சொல்லட்டும்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லும்போதே, 'உணவே அருந்தமாட்டோம் என்று சொல்வீர்களா' என்ற உறுதியைக் கேட்பதுமாதிரி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படிப்பட்ட உறுதியை இந்த நேரத்தில் கேட்கிறபோது எங்களுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 12–35

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். நாங்கள் எங்கள் கட்சியினுடைய நிலைப்பாட்டை வலியுறுத்தியிருக்கிறோம். இப்பொழுதுகூட, நீண்ட காலத்திற்குப் பின்னாலே திரும்ப இந்தக் கோரிக்கை வைக்கப்படுகிறபொழுது—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறபொழுதெல்லாம் இந்தக் கோரிக்கை வைக்கப்படுகிறது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வருகிறபொழுது அந்தத் தீர்மானம் நீக்கப்படுகிறது. இந்தப் போட்டிக்கு இடையிலே இந்தக் கருத்தைச் சொல்வதாக தயவுசெய்து கருத வேண்டியதில்லை என்றுதான் நான் பணிவாகச் சொல்கிறேன். மேலவை என்பது, இப்போது இருக்கிற காலச் சூழ்நிலையிலும், தகவல் தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிற சூழ்நிலையிலும், பல்வேறு கருத்துகளை இந்த அவையிலேயே செயல்படுத்த முடியும் என்ற காரணத்தினால்தான்,

இது வேண்டாமென்று நாங்கள் சொல்கிறோம். அப்படி இந்தக் கருத்தை உருவாக்குவதற்கான முயற்சி எடுக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை இந்த அவையின் மூலமாக சொல்கிற கருத்துகள் மட்டுமல்லாமல், அரசியல் கட்சிகளுடைய தலைவர்களையும் அழைத்து, இந்தக் கருத்தை ஒருமித்த கருத்தாக உருவாக்க வேண்டுமா அல்லது மாற்றுக் கருத்து இருக்கிறதா என்பதை அறிவதற்குரிய முயற்சி எடுத்தால்தான், இதன்மீது இந்தக் கருத்துகளை உருவாக்குவதும், அதை நாம் மத்திய அரசுக்கு அனுப்புவதும் பொருத்தமாக இருக்குமென்ற காரணத்தினாலேதான், இந்த அவையில் சொல்கிற இந்தக் கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி மறுக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் திருநாட்டில், பல்வேறு மாநிலங்களில் மேலவை இல்லையென்று இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் இங்கே பேசினார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற ஆந்திர மாநிலத்திலும், பாரதிய ஜனதா கட்சி ஆளுகின்ற கர்நாடக மாநிலத்திலும் மேலவை இருக்கிறது. அங்கே செயல்பாடுகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே, பல்வேறு காரணங்களாலே தமிழ்நாட்டிலிருந்த மேலவை கலைக்கப்பட்டது. ஒரு குறுகிய மனப்பான்மையோடு கலைக்கப்பட்ட நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னால், அது மிகவும் வேதனையான ஒரு செயல். எனவே, காங்கிரஸ் கட்சி மேலவை வருவதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திலே எப்படி மாநிலங்களவை என்று இருக்கிறதோ அதுபோன்று சட்டமன்றத்திலும் மேலவை இருப்பது அவசியம், அவசரமும்கூட என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மேலவையை வலியுறுத்தி வெகுவிரைவில் இம்மாமன்றத்திலே தீர்மானம் முன்மொழியப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அது

நிறைவேற்றப்பட்ட பிறகு, மேலவை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். டெல்லியிலே மாநிலங்களவை என்று இருப்பதேகூட, ஒரு மேலவைதான். "அந்த மேலவையிலே உறுப்பினர்களாக நாங்கள் இருக்க மாட்டோம்; அது தேவையற்றது; இப்போது விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்தக் காலகட்டத்தில், மாநிலங்களவை தேவையில்லை" என்று மார்க்சிஸ்டுகளோ அல்லது இந்திய கம்யூனிஸ்டுகளோ சொல்லவில்லை. அங்கேயும் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இங்கே மேலவை வந்தால் இங்கேயும் அவர்கள் இடம்பெறுவார்கள் என்று கூறி இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுகிறேன்.

6. வரவு–செலவுத் திட்டம், 2010–2011, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன்.

திரு. போளூர் ம. வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு சிலரை அடையாளம் காட்டுகிறது. சிலரால் மட்டும்தான் வரலாற்றை உருவாக்க முடிகிறது. தமிழகத்திலே எத்தனையோ தலைவர்கள் தோன்றினார்கள், இருந்தார்கள், வாழ்ந்தார்கள், மறைந்தார்கள் என்ற வரலாறுகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சரைப் பார்க்கின்றபொழுது, வரலாறு அவரை இணைத்துக் கொள்ளவில்லை; வரலாறு அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது. இங்கே பல நண்பர்கள், பல உறுப்பினர்கள் பல மாறுபட்ட கருத்துகளைச் சொன்னாலும்கூட, இந்த அவையிலே இன்றைக்கு நின்று பேசுகிறோம் என்று சொன்னால், நினைத்துப் பாருங்கள்; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தஞ்சை பெரிய கோயிலை இராஜராஜ சோழன் கட்டினான் என்று சொல்கிறோம். கோயில் என்று வருகின்றபொழுது, இராஜராஜ சோழனுக்குத்தான் பெருமையே தவிர, அந்தக் கோயிலிலே வீற்றிருப்பதாகச் சொல்கின்ற ஈஸ்வரனுக்குப் பெருமையில்லை.